**செய்தி வெளியீடு எண்: 576** **நாள்:07.08.2020**

**<u>இன்று (7.8.2020), மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K.பழனிசாமி அவர்கள் தலைமையில் திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற திருநெல்வேலி மற்றும் தென்காசி மாவட்டங்களின் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் கூட்டமைப்பு நிர்வாகிகளுடனான கலந்தாய்வுக் கூட்டத்தில் ஆற்றிய உரை:</u>**

அனைவருக்கும் வணக்கம்.

தமிழ்நாட்டில் தொழிற்சாலைகளை அதிகமாக நிறுவ வேண்டுமென்பது மாண்புமிகு அம்மா அரசின் முதன்மையான கொள்கை ஆகும்.

இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2015–ஆம் ஆண்டு சென்னையில் நடத்திய உலக முதலீட்டாளர் மாநாட்டினைத் தொடர்ந்து, 2019–ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மாவின் அரசும் சென்னையில் உலக முதலீட்டாளர் மாநாட்டை நடத்தி பல்வேறு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டு, புதிய தொழில்கள் தொடங்குவதற்கான நடவடிக்கைகளையும் எடுத்திருக்கிறது. இந்தக் கொரோனா தொற்று காலத்திலும்கூட, பல்வேறு நாடுகளைச் சேர்ந்த தொழில் நிறுவனங்களுடன் சுமார் 30 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் 40 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டு தொழில் முதலீட்டை ஈர்த்திருக்கிறோம். இதன்மூலம் சுமார் 67 ஆயிரம் நபர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கித் தந்துள்ளோம். இது ஒரு மிகப்பெரிய சாதனை. இந்தச் சோதனையான நேரத்தில் கூட, இந்தியாவிலேயே, அதிக முதலீட்டை ஈர்த்த மாநிலம் தமிழ்நாடுதான். அதேபோல், அதிகமானவர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தந்ததும் தமிழ்நாடுதான்.

தொழில் நிறுவனங்களின் நிர்வாகிகள் வைத்த கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். தென்மாவட்டங்களுக்கு மேலும் அதிகமான தொழிற்சாலைகளை கொண்டு வரவேண்டுமென்று கோரிக்கை வைத்தீர்கள். அரசின் விருப்பமும் அதுதான். இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கின்றபொழுதே தென்மாவட்டங்களுக்கென்று தனிச்சிறப்புத் திட்டங்களை அறிவித்து, அதன் வாயிலாக புதிய தொழில்கள் தொடங்குவதற்கு ஏற்பாடுகளை செய்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் வழியிலே, அம்மாவின் அரசும், தென்மாவட்டங்களில் புதிதாக தொழில் தொடங்க விரும்பினால், தொழில் துறை செயலாளர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, நிலத்தின் மதிப்பில் பாதியளவு மானியமாகக் கொடுக்கப்படுகிறது. அதுமட்டுமல்லாமல்,

தொழிற்சாலை அமைப்பதற்கும் மானியம் வழங்குகிறோம். தொழில் தொடங்குவதற்கான அனுமதியை Single Window System மூலம் எவ்விதத் தடையுமில்லாமல், குறிப்பிட்ட காலத்திற்குள், மிகவிரைவாக அரசு வழங்குகிறது. இதுபோல பல்வேறு வகைகளில் அரசு உதவி செய்கிறது. எனவே, எவ்வித சிரமமும் இல்லாமல் தொழில் தொடங்கலாம்.

தமிழ்நாட்டில் பணிபுரிந்த வெளிமாநிலத் தொழிலாளர்கள், தங்கள் சொந்த மாநிலத்திற்கு திரும்பவேண்டும் என்று விண்ணப்பித்தவர்களை, அவர்களுடைய சொந்த மாநிலங்களுக்கு அரசின் செலவிலேயே ரயில் மூலம் அனுப்பி வைத்துள்ளோம். கொரோனா வைரஸ் நோய்ப் பரவல் காரணமாக தங்கள் சொந்த மாநிலங்களுக்குத் திரும்பிச் சென்ற வெளிமாநிலத் தொழிலாளர்கள் மீண்டும் தமிழ்நாட்டில் பணிபுரிய விருப்பப்படுவதாக தொழில் நிறுவனத்தினர் தெரிவித்ததாக மாவட்ட ஆட்சித்தலைவர்கள் தெரிவித்ததைத் தொடர்ந்து, அவர்களுக்கு அனுமதி வழங்கலாம் என்ற உத்தரவும் அரசால் வழங்கப்பட்டு உள்ளது. அவ்வாறு வருகை தரும் வெளிமாநிலத் தொழிலாளர்களுக்கு அரசு மருத்துவமனைகளில் கொரோனா நோய்த் தொற்றுப் பரிசோதனை செய்து, positive என்றால், அரசால் உரிய சிகிச்சை அளிக்கப்படும், negative என்றால், நிறுவனத்திற்கு அழைத்துச் சென்று, அரசின் வழிகாட்டுதல்களின்படி பணியில் அமர்த்திக் கொள்ளலாம்.

இ–பாஸ் முறை எளிமையாக்கப்பட்டுள்ளது. இ–பாஸ் வழங்குவதில் எவ்வித பிரச்சனையும் ஏற்படாதவாறு தெளிவான உத்தரவை அரசு வழங்கியுள்ளது. இங்குள்ள தொழில் நிறுவனங்களில் பணிபுரிந்த வெளிமாநிலத் தொழிலாளர்கள் மீண்டும் தமிழகத்தில் பணியாற்ற விரும்பினால் அவர்களை தாராளமாக அழைத்து வரலாம். அவர்களின் பெயர், முகவரி போன்ற விவரங்களை அளித்தால், மாவட்ட ஆட்சித்தலைவர் இ–பாஸ் வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வார். மாதம் ஒருமுறை அதை புதுப்பித்தால் போதும். அத்தியாவசியப் பணிகள் மேற்கொள்பவர்களுக்கு உடனடியாக இ–பாஸ் வழங்க ஏற்கனவே ஒரு குழு இயங்கி வருகிறது. தமிழ்நாடு முழுவதும், ஒவ்வொரு மாவட்டத்திலும் கூடுதலாக ஒரு குழு அமைத்து, இரண்டு குழுக்கள் இயங்க வேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இ–பாஸ் வழங்குவதில் எந்தத் தடையும் கிடையாது. ஆனால், உண்மையான காரணங்களுக்காக மட்டும் முறைப்படி இ–பாஸ் பெற்றுச் செல்லலாம்.

போக்குவரத்து வசதியைப் பொறுத்தவரை, ஏற்கனவே மண்டல அளவில் பொது போக்குவரத்து துவங்க வேண்டுமென்று தான் அரசு முடிவெடுத்து அறிவித்தோம்.

ஆனால், இப்பொழுது கொரோனா நோய்த் தொற்றை தடுக்க வேண்டிய சூழ்நிலையில் நாம் இருக்கிறோம். இது உயிர் சம்பந்தப்பட்ட பிரச்சனை. நாம் கடுமையாக நடவடிக்கைகளை எடுத்த காரணத்தினால் தான், இந்தியாவிலேயே கொரோனா தடுப்புப் பணிகளில் நாம் முதலிடம் வகித்துக் கொண்டிருக்கிறோம், இறப்பு சதவீதம் குறைந்திருக்கிறது, குணமடைந்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது. அண்டை மாநிலங்களில் இப்பொழுது இறப்பு சதவீதம் அதிகரித்து வருகிறது. அந்த மாநிலங்களில் 25,000 நபர்களுக்கு கொரோனா பரிசோதனை மேற்கொண்டால், 10,000 நபர்களுக்கு கொரோனா நோய் அறிகுறி இருக்கிறது. ஆனால் தமிழ்நாட்டில் அப்படியில்லை. தமிழ்நாடு முழுவதும் ஒரு நாளைக்கு சுமார் 62,000 எண்ணிக்கையிலான கொரோனா வைரஸ் பரிசோதனை செய்வதில், 5200 நபர்களுக்கு கொரோனா தொற்று இருப்பது கண்டறியப்படுகிறது. இதைப் படிப்படியாக குறைத்து, இயல்பு நிலை திரும்புவதற்குத் தான் அரசு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. சிலருக்கு கொரோனா நோய்த் தொற்று வந்தால் கூட எந்தவித அறிகுறியும் தெரியாது. விலை மதிப்பில்லாத உயிரை காப்பாற்றுவது அரசினுடைய முதல் கடமை. அதனால் தான் நாங்கள் எச்சரிக்கையாக, படிப்படியாக தளர்வுகளைக் கொண்டுவந்து, இயல்பு நிலைக்கு திரும்ப வேண்டும் என்பது தான் அரசின் நோக்கம். அதற்குத்தான் இந்தக் கட்டுப்பாடுகளை விதித்திருக்கிறோம். இது மக்களைக் காப்பாற்றுவதற்கு அரசு எடுக்கின்ற நடவடிக்கை. மக்களை துன்பப்படுத்துவதற்கு அல்ல.

அதேபோல, தொழிற்சாலைகளில் பணிபுரிகின்ற தொழிலாளர்கள், அரசு அறிவிக்கின்ற வழிமுறைகளை பின்பற்றி பணியாற்றினால்தான் இந்த நோய்த் தொற்றிலிருந்து காப்பாற்றப்படுவார்கள். அதனால், அரசு அறிவிக்கின்ற வழிமுறைகளை அனைத்து தொழில் நிறுவனங்களும் பின்பற்றி, சிறப்பான முறையில் தொழிற்சாலைகள் இயங்க வேண்டும். அரசின் அழைப்பை ஏற்று, வருகை தந்து, சிறப்பான கருத்துக்களை தெரிவித்தமைக்கு நன்றி கூறி, என்றைக்கும் எங்கள் அரசு உங்களுக்கு துணை நிற்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்.

------

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**